★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 17 ஸபர் 8 இதழ் 261
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 2-11-84

## டில்லியில் மக்கள் வெள்ளம்!

### உலகத் தலைவர்கள் 'படையெடுப்பு'

### தலைவியின் முகத்தைக் காணமக்கள் போட்டி

(புதுடில்லி)

இதயம் நிறைந்த தமது தலைவியின் முகத்தை கடைசியாக ஒருதடவை பார்த்துவிடுவதற்கு பலலட்சம் மக்கள் நேற்றுமுதல் புதுடில்லிக்கு திரண்ட வண்ணமிருக்கின்றனர்.

'உலக சமாதானப்புரு' என்று வர்ணிக்கப்படும் திருமதி காந்திக்கு இறுதி அஞ்சலியைத் தெரிவிப்பதற்காக உலகத்தலைவர்கள் புதுடில்லிக்கு படையெடுத்தவண்ணமுள்ளனர்.

20 வருடங்களுக்கு முன்னர் ஜவஹர்லால் நேருவின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த தீன்மூர்த்தி இல்லத்தில் மறைந்த தலைவரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. செயலாளர் நாயகமே முதலில் புதுடில்லி வந்து சேர்ந்த உலகத்தலைவர். பின்னர் இலங்கை ஜனுதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான இலங்கைக்குழு புதுடில்லி வந்து சேர்ந்தது.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர், சோவியத் பிரதமர்,

(8ம் பக்கம் பார்க்க)

● வீட்டுக்குவீடு; வீதிக்குவீதி; கடைகள் - கட்டடங்கள் எல்லாமே கறுப்புக்கொடிகள்! இந்திரா படங்கள்!! வீதிதோறும் வாழைமரங்கள்!!!

# 'இமயம்' சரிந்ததன் எதிரொலி:

# யாழ்ப்பாணம் செயலிழந்தது

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மறைவுக்கு அனுதாபம்தெரிவித்து நேற்று முழுவதும் யாழ்ப்பாண மாவட்டமே செயலிழந்து காணப்பட்டது. கறுப்புக்கொடிகள் இல்லாத வீதிகளோ, வீடுகளோ இல்லை எனுமளவிற்கு எங்கு பார்த்தாலும் கறுப்புமயமாகவே இருந்தது. நகரின் பல வீதிகளில் வாழை மரங்களும் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தது. நேற்று முழுவதும் தொடர்ந்து குண்டுகளும் வெடித்தவண்ணமிருந்தன.

யாழ்ப்பாணத்தில் வர்த்தகநிலையங்கள் மூடப்பட்டு, பாடசாலைகள் மூடப்பட்டு, கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டு பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

## இந்திராவுக்கு அஞ்சலி:

## யாழ். மாநகரசபையில் அனுதாபச்செய்தி பதிவேடு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபையில் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மறைவையொட்டி அனுதாபச்செய்தி எழுதும் பதிவேடு ஒன்று நேற்று முதல் வைக்கப்பட்டுள்ளது.

இந்தியத்தூதுவராலயத்தி லுள்ளஅனுதாப பதிவேட்டில் அனுதாபச்செய்தி எழுத, கொழும்பு செல்ல முடியாதவர்கள், யாழ்ப்பாணத்தில் அனுதாபச்செய்தி எழுதுவதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

யாழ். மாநகரசபை ஆணை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

## குண்டு துளைக்காத ஆடையே அணிபவர் இந்திரா!

### ஆனல் அன்று...

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திருமதி காந்தி குண்டுகள் துளைக்க முடியாத ஆடைகளையே அணிபவர் என்றும் ஆனல் அன்றையதினம் அவர் சாதாரண உடையில் இருந்தார் என்றும் தெரியவந்துள்ளது.

அவர் குண்டு துளைக்காத ஆடைகளை அன்று அணியவில்லை என்பதை அவரது

(8-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கொந்தளிப்பு

(புதுடில்லி)

புதுடில்லி, இந்தோர், வரணுசி, கல்கத்தா, சன்பூர் ஆகிய இடங்களில் இந்திரா கொலையினுல் மக்களின் கொந்தளிப்பு கட்டுமீறியுள்ளது.

இதுவரை கலவரங்களால் எட்டுப்பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர்

( ம் பக்கம் பார்க்க)

## மேனகா ஓடி வந்தார்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமரின் அரசியல் எதிரியான அவரது மருமகள் மேனகா சஞ்சய் காந்தி அவர் சுடப்பட்ட செய்தி கேட்டதும் தனது மகன் வருணுடன் வைத்தியசாலைக்கு ஓடிவந்தார்.

திருமதி காந்தியின் உயிர் பிரிந்த வேளையில் அவரும் கூடவே இருந்தார்.

## "இலங்கை தமிழர் நம்பிய இமயம் சரிந்தது"

### நெடுமாறன் கவலை

(சென்னை)

இலங்கைத் தமிழர் நம்பியிருந்த இமயமலை சரிந்துவிட்டது என்று காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு பி. நெடுமாறன் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

உலகமே அதிர்ச்சியடைந்துள்ள இந்தச் சம்பவம் கண்டிக்கப்படவேண்டிய ஒன்று. இந்த சம்பவத்தால் இனிப் பெரும் விளைவுகள் ஏற்படும் என்றும் அவர்தனது செய்தியில் குறிப்பிட்டார்

## அரைக்கம்பத்தில் ஐ. நா. கொடி

(ஐ நா.)

திருமதி இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட விபரம் நேற்று ஐ. நா.வில் அறிவிக்கப்பட்டதும் சில நிமிட நேரம் அங்கு மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது

இதனையடுத்து பொதுச்செயலாளர் திரு. ஜாவியாபெரஸ்டி

(8ம் பக்கம் பார்க்க)

## இந்திரா கொலை படமானது!

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சுட்டுக்கொலை செய்யப்

-ட் பக்கம் பார்க்க]

## கொலைஞரில் ஒருவன் பிந்ரன்வாலேயின் ஊரவன்!

(புதுடில்லி)

திருமதி இந்திராகாந்தியைக் கொலைசெய்தவர்களில் ஒருவன் கடந்த ஜூன் மாதம் இந்தியத் துருப்புகளால் 'பொற்கோயில்' வளாகத்தில் கொல்லப்பட்ட தீவிரவாத சீக்கியத் தலைவன் ஜர்னைன்சிங் பிந்ரன்வாலேயின் ஊரைச் சேர்ந்தவனுவான்!

பஞ்சாப்பில் உள்ள 'குர்தாஸ்பூர்' என்ற அந்த ஊரைச் சேர்ந்த அக் கொலைஞன் கடந்த இரு மாதங்களாக அங்கு விடுமுறையில் தங்கிவிட்டு இரு தினங்களுக்கு முன்னரே மீண்டும் திருமதி காந்தியின் இல்லத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்ருன்.

கொலைஞர்கள் சீக்கியர்களாவர் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இந்திய செய்திச் சேவை அமைதியைப் பேணும்வகையில் இதனை அறிவிப்புக்களில் குறிப்பிடவில்லை.

## உரும்பராய் சம்பவம்:

## இரு இளைஞர்கள் பலி!

[யாழ்ப்பாணம்]

உரும்பராய்க்கும் ஊரெழுவுக்குமிடையில் நேற்றுக் காலை இனந்தெரியாத இரு இளைஞர்கள், இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானுர்கள்.

இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபொழுது இராணுவத்தினரின் எச்சரிக்கையை மீறி சென்றபொழுதே துப்பாக்கிச்சூட்டுக்கிலக்காகி மரணமானதாகக் கூறப்படுகிறது.

மரணமான இரு இளைஞர் சடலங்களும் யாழ் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## குண்டு

யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண அரசாங்கசெயலகப் பகுதியில் நேற்றுக் காலை நடந்த குண்டுவீச்சினுல் அங்கு நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரியின் ஜீப் ஒன்று சேதமடைந்ததாகவும், அந்த ஜீப் சாரதி காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

அரசாங்க செயலக கீழ்ப் பகுதி கண்ணுடி யன்னல்கள் குண்டின் அதிர்ச்சியினுல் உடைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

## ஊரெழுவில் புகைமண்டலம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய்க்கும் ஊரெழுவுக்குமிடையே நேற்றுப்பகல் இடம்பெற்ற அசம்பாவித சம்பவமொன்றைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள மக்கள் வெளியேறி கோப்பய், நீர்வேலி, கோண்டாவில், கொக்குவில் ஆகிய இடங்களிலுள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

14'' கலர் சொனி ரெலிவிஷன் விற்பனைக்குண்டு. நான்கு மாத பாவனை. தொடர்பு: சிங்கம், 496, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 541

அரியாலை கிழக்கு கண்டி வீதியிலிருந்து 5 மைல், அன்னை வேளாங்கன்னிக்கு அருகாமையில் 20 பரப்புகாணி தென்னைகளோடு காணி உடன் விற்பனைக்கு உண்டு வ. விநாயகமூர்த்தி, 88/2 சேர். பொன் இராமநாதன் ரோட், திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். 522

திருநெல்வேலி கிழக்கில் 1 பரப்பு காணியில் அமைந்த மாடிவீடமைப்பு கீழ்வீடு மாத்திரம் முடிவடைந்த நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: நா. இரத்தினசபாபதி, பணிக்கர்வளவுஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 537

பருத்தித்துறை நெல்லியடி பிரதான வீதியில் நெல்லியடிக்கும் மாலி சந்திக்குமிடையில் 'பாலன்ஸ்' கைத்தொழிற்சாலைக்கு அருகில் 3½ பரப்பு தோட்டக்காணி (தொழிற்சாலை, வீடுகட்ட உகந்தது) விற்பனைக்குண்டு. தொடர்பு வே. சின்னத்துரை, விநாயகர் வீதி, அல்வாய் தெற்கு, அல்வாய். 517

கொழும்புத்துறையில் துண்டி வீதியில் 3 பரப்பு காணி, பரந்தன் 7-ம் வாய்க்காலில் 8 ஏக்கர் காணி (இருபோகம் செய்யக்கூடிய நெற்காணி) அத்தியடி புது வீதியில் ½ பரப்பு காணிக்குள் 5 அறைகளைக்கொண்ட வீடு உடன் விற்பனைக்குஉண்டு தொர்டபு: கொள்ளவும்: குயிக்ஸ் என்ரபிறைசஸ், 533, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 538

கண்டி வீதி, கைதடி நுணுவிலில் புதிதாகஆரம்பிக்கப்படவுள்ள றேடியன் புறடச்ஸ்ரயர் தொழிற்சாலைக்கு நேரே முன்பாகவுள்ள 11 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: சட்டத்தரணி, செ. அம்பிகைபாலன் ஜே பி யூ எம், இல 9, கண்டி வீதி, சாவகச்சேரி, தொலைபேசி: 262, சாவகச்சேரி. 535

## விற்பனைக்கு

தஞ்சாவூர் புதிய வீணை விற்பனைக்கு உண்டு தொடர்பு: இசைமணி க. சித்திவிநாயகம் 37, அரசவீதி, பண்டாரக்குளப்பிள்ளையார் கோயிலடி, நல்லூர். 540

## தேவை

எவர்சில்வர் ஸ்தாபனத்தில் தொழில் பழகவிரும்பும் 20வயதுக்குட்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கவும். Eversilver Industries (Pte) Ltd., Industrial Estate, Atchuvely. தபால் மூலம்மட்டும் தொடர்புகொள்ளவும். 507

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் சில்லறைக் கடைக்கு விற்பனையாளர் உடன் தேவை. வயது முதிந்தவர்கள் விரும்பத்தக்கது. சம்பளத்துடன் சாப்பாடு, தங்குமிடவசதி செய்து தரப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும்: கு. சவுந்தரம், சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு. 539

## வாடகைக்கு

கே.கே.எஸ். வீதி, சி. எஸ் கே. சந்திக்கருகில் தொலைபேசி வசதியுடன், எந்த வியாபாரமும் உடன் ஆரம்பிக்கக்கூடிய நிலையில் கடை வாடகைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22762. 525

## நண்பர்களுக்கு மட்டும

விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தால் 31-10-1984 அன்று நடத்தப்பட இருந்த அதிஸ்ட லாபச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 30-11 1984 அன்று பிற்போடப்பட்டுள்ளது. இதன் முடிவுகள் 2-12-1984 அன்றைய ஈழநாடு பத்திரிகையில் வெளியாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். (526)

# கண்ணீர் அஞ்சலி



மாநிலம் அழுகுதம்மா மன்பதைதுடிக்குதம்மா
நீள்நிலமெங்கும் உன்பிரிவால் வாடுதம்மா
— நித்தம்
மானிட உயர்வுக்காக நீ ஆற்றிய பணிகளெல்லாம்
ஓய்ந்ததோ இன்று அம்மா
நானிலம் போற்ற வாழ்ந்தாய்
நல்வழி காட்டி நின்றாய் — இன்று
பாவியர் செயலால் உந்தன்
ஆவியோ பிரிந்ததம்மா
அவனி வாழ்வில் உயர் ஆதவனாய்
அணிசேரா இயக்கத் தலைமை கொண்டாய்
— அனைத்து
மக்கள் அன்பினைப் பெற்றாய்
ஆறாத்துயரில் எம்மை ஏன் விட்டாய்

அன்னை இந்திராகாந்தியின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போம்,

**சாமி கராஜ், றேடியேற்றர் வேக்ஸ்,**

631, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [544]

## அனைவரும் அகற்றப்பட்டனர்

(புதுடில்லி)

இந்திராவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான 'சர்ஜ் ஜார்ஜங்'கில் அமர்த்தப்பட்டிருந்த சகல பாதுகாப்புச்சேவை அதிகாரிகளும் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

அவர்களில் பலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் சிலர் புலன்விசாரணைகளுக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்திராவின் கொலை, நீண்டகாலமாக நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டதென பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (கி)

## புதிய நிர்வாகிகள்

[பண்டத்தரிப்பு]

நவாலி தெற்கு கிராம அபிவிருத்திசங்கத்தின் புனரமைப்பு பொதுக் கூட்டம் சண்டிலிப்பாய் உதவிஅரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு

(8ம் பக்கம் பார்க்க)

## வசிப்பிடக்காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை எல்லையின் மீசாலை புத்தூர் சந்தி சிற்றம்பலப வீதியில் 18 பரப்பு காணி 5 பரப்பு துண்டுகள் வீதமும் பிரித்து விற்பனைக்கு உண்டு. தொடர்பு நேரில். வே. குமாரமூர்த்தி, குமார வாசம் மீசாலை தெற்கு. 533

## காணவில்லை

யாழ்ப்பாணம் சென். மேரிஸ் (ஓ. எல். ஆர்.) பாடசாலையில் கல்விகற்கும் 48, மாட்டின் ரோட்டைச் சேர்ந்த இ முரளீதரனை 26-10-84 நண்பகலில் இருந்து காணவில்லை. வயது 14-சுருண்ட தலைமுடி, உயரமனவர் கடைசியாக நீலக்காற் சட்டையுடனும் வெள்ளை சேட்டுடனும் காணப்பட்டார். சத்திர சிகிச்சைக்காக வந்த அவரது மாமியாரும், அவரை வளர்த்த மாமனும் திடீர் சுகவீனமுற்று படுத்த படுக்கையாகி விட்டனர். இவரைக் காணத்துடித்த வண்ணம் இருக்கிறார்கள். தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் விலாசத்துக்கு அறியத்தரவும். திருமதி ந.பொன்னையா, 48, மாட்டின் ரோட், யாழ்ப்பாணம். முரளீ- உங்களுக்கு என்ன நடந்ததோ என்று மாமாவும், மாமியும் அழுத வண்ணமேயுள்ளனர். ஆச்சியும்கூட படுத்த படுக்கையாகி விட்டா- மாமிக்கும் வருத்தம் கூடிவிட்டது. நீங்கள் எங்கிருந்தாலும் உடனே வரும்படி மாமா உங்களை அழைக்கிறார்.

—குமாரசிங்கம் அன்ரி.

53

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு கிராமச்சங்கத்திற்கு சமீபமாக 10 பரப்பு வீடு கட்டுவதற்கு ஏற்ற காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
க. ஆறுமுகம்,
பழைய ஆஸ்பத்திரி வளவு, கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (529)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1985

பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு இம்மன்றத்தோடு, தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல்- 1985'' எனக் குறிப்பிடப்பட்டு 30-11-1984-ம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ இதன் கீழ்க் கையொப்பமிட்டுள்ளவருக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணத்துக்கான காசோலை/ காசுக்கட்டளை ஆணையாளர் மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற பெயருக்கு எழுதப்பட்டு விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

| | பொருள் விபரம் | மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணம், |
|---|---|---|
| 01. | எழுதுகருவி வகைகள் | 75-00 |
| 02. | அச்சிட்ட பொருட்கள் | 75-00 |
| 03. | அலுவலக உபகரணங்கள் | |
| 04. | சௌக்கியப் பொருட்கள் (மலகூட, நகரசுத்திக் களஞ்சியப் பொருட்கள்) இரும்பு வாளிகள், தும்புத்தடிகள், ஈர்க்குக்கட்டுகள், மலகூட, நகரசுத்தி வண்டிகள் கிருமி நாசினி வகைகள் முதலியன | 75-00 |
| 05 | பிரசவவிடுதிகளுக்கு மேலைநாட்டு மருந்துகள் | |
| 06. | மரப்பலகைகள் | |
| 07. | பெற்றோல், எண்ணெய் (இன்ஜின்எண்ணெய்) முதலியன | |
| 08. | லொறிக்கான ரயர், ரியூப் பற்றறி முதலியன. | |
| 09. | தண்ணீர் மானிகள் | 50-00 |
| 10. | பி. வி. சி. குழாய்கள், பொருத்திகள் | 50-00 |
| 11. | ஜி. ஐ. குழாய்கள்-பொருத்திகள் | 50-00 |
| 12. | கியூம் குழாய்கள்-பட்டியல்கள் | |
| 13. | சகல அளவுகளிலுமான எம். எஸ். கம்பிகள்-இரும்பு | 50-00 |
| 14. | இரும்புச் சாமான்கள் | 25-00 |
| 15. | பெயின்ற் இனுமல்/இமல்சன் | — |
| 16. | ஆயுர்வேத மருந்துகள் | — |
| 17. | வாகனத் தகடுகள் | |
| 18. | கோலவுடைகள் | |
| 19. | பால் உணவுகள் | |
| 20. | பண்ணைக்குரிய அக்ரோ இரசாயனப்பொருட்கள் | |
| 21. | லொறிக்கான உதிரிப்பாகங்கள் | |
| 22 | சேவை இணைப்புக்கள், விநியோகக்கம்பிகள், தெருவிளக்கேற்றல் முதலியனவற்றிற்கான மின்சாரப் பொருட்கள் | 250-00 |

02. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலிலிருந்து வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படும். எனினும் அவசியமாகக் காணுமிடத்து வேறு வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரிக் கொள்வனவு செய்யும் உரிமை மன்றத்திற்கு உண்டு. வேண்டப்படும்போது விலைகளைச் சமர்ப்பிக்க அல்லது கொள்வனவு ஆணை விடுக்கப்படும்போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விபரக் கூற்றுக்களுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாகவிருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தல் இல்லாது பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

**சி.வி.கே. சிவஞானம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 26-10-84.

543

கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.

**AIR-TRANSIT**

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

# "இறுதித்துளி இரத்தம் வரை இந்திரா இந்தியாவுக்கே தன்னை இழந்தார்!"



## பிரதமர் ரஜீவ் நாட்டுமக்களுக்கு உரை!!

(புதுடில்லி)

"திருமதி இந்திரா தாம் சிந்திய கடைசித் துளி இரத்தம்வரை இந்தியாவுக்கே தம்மை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். இந்தியக் குடிமக்கள் தொடர்ந்து அவர் காட்டிய வழியில் இந்தியாவின் ஐக்கியத்துக்காக இன, மத ஒற்றுமைகளைக் கட்டிக் காப்பதே அவருக்குச் செய்யும் மாபெரும் அஞ்சலியாகும்".

இவ்வாறு இந்தியாவின் மூன்றுவது பிரதம மந்திரியாகத் திருமதி இந்திரா காந்தியின் மறைவையடுத்துப் பதவியேற்றுள்ள திரு. ரஜீவ் காந்தி தெரிவித்தார்

திரு. ரஜீவ் காந்தி நேற்று முன்தினம் தமது பதவியேற்பையடுத்து வானொலி, தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

"எனது தாயார் திருமதி இந்திரா காந்தியின் மறைவையடுத்து இந்தியா குழம்பிவிடக் கூடாது. இந்தத்துயரகரமான வேளையில் நாம் உயர்ந்தளவு நிதானத்தைக் கொண்டிருக்க வேண்டும்

உணர்ச்சி வசப்படலாகாது. உணர்ச்சிகள் உண்மையான மனித உணர்வுகளைத் தளரச் செய்துவிடும்.

இன்று என்னிடம் மாபெரும் பொறுப்புக் கையளிக்கப்பட்டுள்ளது. இப்பொறுப்பை உறுதியுடன் ஏற்க இந்திய மக்களின் ஆதரவு எனக்குத் தேவைப்படுகிறது.

இந்திரா காந்தி எனக்கு மட்டுமல்ல; இந்தியா முழுவதுக்குமே ஒரு அன்னையாக விளங்கினார். இந்தியர்கள் அனைவரையும் அவர் தமது ஒரு மாபெரும் குடும்பமாக எண்ணினார்" என்றார். [கி]

## சீக்கிய சமூகத்தவர்மீது பரவலாகத் தாக்குதல்கள்!

### கன்பூரில் 3சீக்கியகோயில்கள் தரைமட்டம்!!

(புதுடில்லி)

இந்திய மாநிலங்களில் பரவலாக சீக்கிய இனத்தவர்மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன!

கொலைஞர்கள் சீக்கியர்களே என்ற செய்தி அறிவிக்கப்படாதபோதிலும், மக்கள் வதந்திகள் மூலமாக இதனை அறிந்து சீக்கியர்களைத் தாக்கத் தொடங்கியுள்ளனர்.

கல்கத்தாவில் சீக்கியர்களுக்குச் சொந்தமான பஸ்வண்டிகள், லொறிகள், மற்றும் மோட்டார் கார்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. டிராப்ப் வாகனங்களும் எரிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து இங்கு இராணுவம் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளது.

கன்பூர் என்ற இடத்தில் மூன்று சீக்கிய கோயில்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அத்துடன் சீக்கிய கடைகளும், வீடுகளும் நிரையாக தீக்கிரையாக்கப்பட்டன. பம்பாயிலும் சீக்கியவர்களின் உடமைகளுக்குச் சேதங்கள் பெருமளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 3 பிரதான நகரங்களில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### இரத்தம்பற்றி இந்திரா ஏன் கூறினார்?

[புதுடில்லி]

நான்கு தினங்களுக்கு முன்னர் இந்திரா ஒரிஸ்ஸாவில் பயணம் மேற்கொண்டார். அங்கு "நாட்டுக்காக எனது ஒவ்வொரு துளி இரத்தத்தையும் கொடுப்பேன்" என்றார்.

இதைக்கேட்டு சிலருடன் சென்ற பி. ரி. ஐ. பத்திரிகையாளர் ஒருவர் சற்று அதிர்ந்து போனாராம். எதற்காக இந்திரா இரத்தம்பற்றியெல்லாம் பேசவேண்டும்?ஏன் இவ்வளவு தூரம் உணர்ச்சி வசப்படவேண்டும்என்று தாம் எண்ணியதாக அந்தபி. டி. ஐ காரரர் கூறினார். (கி)

## மலர்மேடை மீது இந்திரா பூதவுடல்

தன்னிகரில்லா இந்தியத் தலைவி இந்திரா காந்தியின் பூதவுடல்' தீன்மூர்த்தி பவன்' மண்டபத்தில் மலர் மேசை மீது கிடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 'தீன் மூர்த்தி பவனுக்கு அவரின் பூதவுடல் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இராணுவ பீரங்கி வண்டியில் வைக்கப்பட்டு 'சர்ஜார் ஜங்' இல்லத்திலிருந்து கொண்டு வரப்பட்டது.

புதிய பிரதமர் திரு ராஜீவ் காந்திமற்றும் ஏனைய இந்திராவின் உறவினர்கள் பூதவுடலை 'தீன்மூர்த்திபவனில்' கையேற்றனர்.

காலை வேளை டில்லியின் கடுங்குளிரையும் பொருட்படுத்தாது. ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், சிறுவர், இளைஞர், யுவதிகள் 'தீன் மூர்த்தி பவனில் திரண்டிருந்தனர்.

இந்திராவின் பூதவுடல் இங்கு வந்ததும் "இந்திரா புகழ் வாழ்க" என்ற கோஷம் வானைப் பிழந்தது; (கி)

## "என்னை நேசிப்பவர்களுக்கு சிரமம் ஏற்படுத்தாது இறக்க விரும்புகிறேன்!"

### ஒரு பேட்டியில் இந்திரா!!

(யாழ்ப்பாணம்)

"கண்ணியத்தோடு- என்னை நேசிக்கின்றவர்களுக்கு மிக மிகக்குறைவான சிரமத்தை மட்டும் ஏற்படுத்திவிட்டு மரணமடையவே விரும்புகிறேன்"

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சிலமாதங்களுக்கு முன்னர் மேற்கு ஜெர்மன் பத்திரிகையொன்றுக்கு அளித்திருந்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

மேற்கு ஜெர்மனியிலிருந்து வெளியாகும் 'பிராங்போர்டர் இலிஜிமேன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியின்போது "உங்கள் மரணம் எப்படி சம்பவிக்க வேண்டும்என்று நீங்கள் விரும்புகிறீர்கள்,' என்று நிருபர் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அந்தபேட்டியில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் சிலவற்றை இங்கே தருக்கிறோம்.

கே: உங்கள் வாழ்வில் மிகவும் துயரம் தரக்கூடியது எது?

பதில்: என்னால் நேசிக்கப்படுபவர்களின் மரணம்.

கே: நீங்கள் செய்த மகத்தான தவறு?

பதில்: இதை மற்றவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

கே: உங்களைப் பொறுத்தவரை எது மகத்தான அழிவாக இருக்கும்?

பதில்: இந்தியாவின் சுதந்திரம்- ஒற்றுமை இவற்றைக் குலைக்கும் அனைத்தும்.

கே: நீங்கள் எப்படி இருக்க விரும்புகிறீர்கள்?

பதில்: என்னைப் போலவே.

கே; தங்களின் தற்போதைய மனநிலை?

பதில்: உலக நிலமைகளை எண்ணி கலங்கி இருக்கிறது'

[தகவல்:எஸ். எஸ். கே.]


உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து

LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'

LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது 'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,

லங்கா சீமெந்து லிமிட்டட்

கீரிமலை ரோட்,

காங்கேசன்துறை.

போன் :- 22605



### மணிவாக்கு

நத்தம் போற்கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது —குறள்

# நமது நோக்கு

## புனித உயிர்த்துறவி

'துன்பம் உறவரினும் செய்க, துணிவாற்றி இன்பம்பயக்கும் வினை' என்ற உலகப் பெருங் கவிஞர் திருவள்ளுவரின் அறிவுரையே சோகத்தில் தத்தளிக்கும் கோடி மக்களுக்கு ஒரு சிறு தேற்றம்.

பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் மறைவு சுதந்திர இந்தியாவின் மூன்றாவது மைற்கல்.

தேசபிதா மகாத்மா காந்தி 1948 ஜனவரி 30-ல் சுட்டுக் கொல்லப்பட்டபோது முதலாவது அத்தியாயம் முடிவடைந்தது; உலகம் அதிர்ச்சியடைந்தது. அஹிம்சாமூர்த்தி பிரார்த்தனைக் கூட்டத்தில் ஒரு இந்திய இந்து மதத் தலைவரால் கொல்லப்பட்டார்.

அன்று அனாதையான பாரதேசத்துக்கு ஏற்கனவே தயாரான தலைவர் பாரதப் பிரதமர் நேரு சுக்கான் பிடித்துக் கொண்டார். பாரதம் கவலை தெளிந்து ஒரு புதுச் சமுதாயத்தை உருவாக்க முயன்றது.

பதினேழு வருடங்கள் பிரதமராகத் தலைமை தாங்கிய 'ஆசிய ஜோதி' என்று அழைக்கப்பட்ட ஜவகர்லால் நேரு அரசியல் அதிர்ச்சியால் ஏற்பட்ட சடுதி நோய்க்குப் பலியானார். சீன யுத்தம் அவர் நம்பிக்கை வைத்திருந்த பஞ்சசீலத்தைத் தவிடு பொடியாக்கி விட்டது. நேருவின் மறைவுடன் சுதந்திர இந்தியாவின் இரண்டாவது அத்தியாயம் முடிவடைந்தது.

சோக நாடகம் தொடர்ந்தது. இந்திய அரசியலில் நிரந்தர இடம்பெற்ற காந்தி-நேரு இலட்சியங்கள் தொடரவேண்டுமென்ற இந்திய சமுதாயத்தின் ஏகோபித்த முடிவு இந்திரா சகாப்தத்தை ஆரம்பித்தது.

தந்தை வழிநின்று, அவரின் சமத்துவச் சமுதாய நோக்கை உருப்படியான திருத்தங்களால் நிறைவேற்றத் தம் இறுதி மூச்சு வரையும் உழைத்தவர் திருமதி இந்திரா காந்தி.

''இதம் தருமனையின் நீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும், பதம் திரு இரண்டும் மாறிப் பழிமிகுந் திழிவுற்றாலும், விதந்தரு கோடி இன்னல் விளைந்தெனை அழித்திட்டாலும், சுதந்திர தேவி! நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே'' என்று பாரதியார் பாடினாற்போல.

இன்னல்கள் எத்தனை வரினும் மனம்தளராது இந்திய நாட்டின் பூரண வளர்ச்சிக்கு முயன்றார்.

அப்பெருமுயற்சியில் மிகத் தீவிரமான கட்டத்தில் தமது குரு தமது தந்தையின் குரு மகாத்மா காந்தியைப் போல கொலைகாலனின் துப்பாக்கிக்கு உணவானார். இந்திரா அத்தியாயம் முடிவடைகிறது.

இந்திய அரசியலின் சோக நாடகம், இன்னொரு உலகப்பெருங் கவிஞர் ஷேக்ஸ்பியர் எழுதிய சோக நாடகங்களில் வரலாறு என்ற விடயத்தை ஒட்டியது.

ஷேக்ஸ்பியரின் சோக நாடகங்கள் துன்பத்தின் தாற்பரியத்தை மிகநுட்பமாக விளக்குகின்றன.

சரித்திரம் தொடர்பான அவருடைய சோகநாடகங்கள்- குறிப்பாக ஹாம்லெட் யூலியஸ் சீசர்போன்றவை, ஒரு காலத்தை, ஒரு களத்தைக் கொண்டவையேயாயினும் மனித இயற்கையில் குடிகொண்டிருக்கும் தீமை, பொறாமை, அதிகாரப் போட்டி, குரோதம் என்ற குணங்களின் தத்துவத்தைப் படம் பிடிக்கும் உயிர் ஓவியங்களே.

மகாத்மாகாந்தி கொல்லப்பட்டபோது அறிஞர் ஷா குறிப்பிட்டதுபோல் கொடிய உலகில் அளவுக்கு மேற்பட்ட நன்மை தீமையாய் முடியுமென்ற கருத்து பரிணமித்தது.

பிரதமர் நேரு மறைந்தபோது இந்தியாவில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி வறுமை, நோய், அறியாமை என்ற அடிப்படைத் துன்பங்களைத் துடைக்கவல்ல வீரன் சிந்தனைத் திறனுக்கேற்ற செயலுறுதி இன்மையால் மனம் வாடி மறைந்த சோகக் கதை சொல்லப்பட்டது.

இதற்கு நேர்மாறாக ஒரு ஆண்மகனுக்கு இல்லாத துணிவுடன், ஏழைமக்கள் ஒதுக்கப்பட்டவர்கள், உலகில் வறுமையால் வாடுபவர்கள், ஆதிக்கப் போருக்குப் பலியாகிறவர்கள் அனைவர்க்கும் ஆதரவளித்த உலகப் பெருந்தலைவர் இந்திரா, சோக்கிறற்றிஸ் போல், இயேசுவைப் போல, மகாத்மாவைப் போல் புனித உயிர்த்துறவியானது வரலாற்றின் இயற்கை நியதி.

இந்திரா சகாப்தம் முடிவடைந்தாலும் காந்தி சகாப்தம் - 1948, ஜனவரி 30ல் மறைந்த ஒளி மீண்டும் இந்திய நாட்டில் தொடரும்.

## ''எனக்கு பயமில்லை: திறந்த காரிலேயே திரிகிறேன்''

### -இந்திரா

(புதுடில்லி)

''நான் வழக்கமாக திறந்த காரிலேயே பயணஞ் செய்கிறேன்- எனக்கு ஒரு பயமும் இல்லை''.

பல தடவைகள் என் மீது தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன ஒரு தடவை ஒருவன் என் மீது துப்பாக்கியைக் குறிவைத்தான் மற்றொரு தடவை இன்னொருவன் கத்தியால் என் மீது எறிந்தான்.

இப்படி திருமதி இந்திரா காந்தி கடந்த அக்டோபர் மாதத்தில் அமெரிக்கப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

[கி]

## இந்திரா மறைவு: நல்லை ஆதீன முதல்வர் இரங்கற் செய்தி

(யாழ்ப்பாணம்)

''ஜீவாத்மா நிலையானது என்றும் அழியாதது' பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியின் ஜீவாத்மா பெம்மான் பொற்பாதங்களைச் சார்ந்து பேரின்பப் பெருவாழ்வு எய்த வேண்டுமென உளமாரப் பிரார்த்திக்கின்றோம். நாம் அனைவரோடும் பிரார்த்திப்போமாக''

இவ்வாறு நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மறைவையொட்டி வெளியிட்ட இரங்கற்செய்தியில் தெரிவித்துள்ளார்.

## வயதில் குறைந்த இந்தியாவின் புதிய பிரதமர்

[புதுடில்லி]

புதிய இந்தியப் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. ரஜீவ் காந்தி 40 வயதான மிகவும்வயதில் குறைந்த இந்தியப் பிரதமராவார்.

1944-ம் ஆண்டு ஆகஸ்ட் 24-ந் திகதி திரு. பெரோஸ் காந்திக்கும், திருமதி இந்திரா காந்திக்கும் மூத்த புதல்வராக இவர் பிறந்தார்.

தமது ஆரம்பக்கல்வியை புதுடில்லியில் பெற்ற இவர் உயர் கல்வியை பிரிட்டனில் பெற்றார். அங்கு கல்விபயின்ற காலத்திலே இத்தாலியப் பெண்ணான சோனியாவைக் காதலித்து இவர் திருமணஞ் செய்து கொண்டார். திரு. ரஜீவ்காந்தி சோனியா தம்பதிகளுக்கு பிரியங்கா என்ற மகளும், ராகுல் என்ற மகனும் உள்ளனர்.

மிகவும் அமைதியான சுபாவமுடைய ரஜீவ்காந்தி அரசியலில் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. இவரது சகோதரரான காலஞ்சென்ற சஞ்சேகாந்தி தீவிரமாக அரசியலிலும், விமானஞ் செலுத்துவதிலும் ஈடுபட்டிருந்தபோது ''கவனமாக

[8ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

## கொலைஞன்மீது ஒரு ரவையும் வீணாகாது தீர்க்கப்பட்டது!

[புதுடில்லி]

இந்திரா சுடப்பட்டதையடுத்து கொலைஞர்கள் மீது இந்திராவுக்கு விசுவாசமான மெய்க்காப்பாளர்கள் சரமாரியாகச் சுடத் தொடங்கினர்.

இவ்வாறு சுட்டவர்களில் ஒரு மெய்க்காப்பாளர் தனது தன்னியக்க துப்பாக்கியிலிருந்த ரவைகள் அனைத்தையும் ஒன்றுவிடாது ஒரு கொலைஞன் மீது சுட்டுத் தீர்த்தார் என்று கூறப்பட்டது.

இந்திராவின் மீதான தாக்குதல் முற்றிலும் எதிர்பாராத திடீர்த் தாக்குதலான போதிலும் அவருக்கு விசுவாசமான காவலர்கள் திடீர்ப் பதிலடியில் புறமுதுகு காட்டாது இறங்கினர். அதே வேளை திருமதி காந்தியையும் அலாக்காகத் தூக்கிக் காரில்போட்டு வைத்தியசாலைக்கு விரைந்தனர்.

[கி]

## நீதியை நிலைநாட்டும் பணியில் என்னையே அர்ப்பணிக்கின்றேன்

### புதிய பிரதம நீதியரசர் உறுதி

(கொழும்பு)

பணிவுணர்வோடும், நீதிக்காக என்னையே அர்ப்பணிக்கும் உறுதியோடும், இலங்கையின் பிரதம நீதியரசராக நான் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளேன். எமது குடிமக்களின் அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்தும் பொறுப்பையும், சமூக, பொருளாதார, அரசியல் மட்டங்களில் நமது நாடு அடைவதற்கு முயன்று கொண்டிருக்கும் சட்ட ஆட்சியை நிலை நிறுத்தும் பொறுப்பையும் 1978ம் ஆண்டு அரசியல் அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள அடிப்படை உரிமைகளை நிலை நாட்டுவதும் நிர்வாகத்தினர் மேற் கொள்ளும் நடவடிக்கைகள் எல்லாம் சட்டத்துக்கு இசைவானவைதானா என்பதை உறுதிப்படுத்துவதற்காக நிர்வாகத்தின்மீது இடைவிடாத கண்காணிப்புச் செலுத்துவதும் உயர் நீதிமன்றத்தின் புனிதப் பணியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு புதியபிரதமநீதியரசராகப்பணிஏற்றிருக்கும்திரு சர்வானந்தா அவர்கள் அண்மையில் உயர் நீதிமன்றத்தினால் தமக்களிக்கப்பட்ட வரவேற்பின் போது உரையாற்றுகையில் கூறினார்.

இந்த நீதிமன்றத்தின் மீது சகல தரப்பு மக்களும் வைத்திருக்கும் நம்பிக்கையில் தான் இதன் சக்தியும் நீதியும் தங்கியுள்ளது. எனவே அரசியல் சட்டத்தினால் எமக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை நானும் எனது சகாக்களும் அரசியல் சட்டத்தின் உண்மையான உணர்வுக்குக் இசைவாகத் தொடர்ந்து செயல்படுவோம் என்றும் எமது பாரம்பரிய நீதி செயல்பாட்டுக்கு மாறாகவோ நீதி செயல்பாட்டில் பொதுமக்கள் நம்பிக்கை இழக்கும் வகையிலோ நடக்க மாட்டோம் என்றும் உறுதிப்பட கூறவிரும்புகிறேன்' என திரு. சர்வானந்தா மேலும் கூறினார்.

சட்ட ஆட்சி வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு, நீதிபதிகள் நீதியாகவும், பாரபட்சமின்றியும் நன்நோக்குடனும் பயமின்றியும் நடந்து கொள்ள வேண்டும். வழக்கறிஞர்கள் முழுமனதுடன் நீதிபதிகளுக்கு உதவவேண்டும், என்று கூறிய அவர், எனது நீதித்துறை செயல்பாடுகள் பற்றிய இறுதித் தீர்ப்பு சட்ட வல்லுனர்களாலும், வழக்கறிஞர்களும் பொது மக்களாலும் தான் வழங்கப்படவேண்டும். இப்பொழுது வழங்கப்பட்டுள்ள இடைக்கால தீர்ப்பு நான் எதிர்பார்த்ததை விட தாராளமாகவுள்ளது என்றார்.

அவர் மேலும் பேசுகையில் அட்டோனி ஜெனரல் திரு. சிவாபசுபதியும், தாமும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் என்பதையும் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் திரு. ஹேர்மன் ஜே சி பெரேராவும் சட்டக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பதையும் நினைவு கூர்ந்தார்

அட்டோர்னி ஜெனரல் திரு. சிவாபசுபதி உரையாற்றுகையில் ''நீங்கள் உங்கள் ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பெற்றீர்கள். இப்பொழுது அதுதான் வடக்கில அகில இலங்கைக் கல்லூரியாக விளங்குகின்றது. நானும் 5 ஆண்டுகள் அங்கு செலவழித்தேன். அந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க விடயங்களில் நாம் இருவரும் கடந்த சில ஆண்டுகளாக பல நடவடிக்கைகளில் ஒன்றாகப் பணியாற்றியுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

வழக்கறிஞர்கள் சங்கத்தலைவர் திரு. ஹேர்மன் ஜே. சி. பெரேரா பேசும்போது: ''நீங்கள் வழக்கறிஞராக நீதிமன்றில் ஆற்றிவந்த சிறப்பான பணியினை தியாகம் செய்து நீதிபதியானீர்கள். இன்று இந்த நாட்டின் நீதித்துறையில் மிக உயர்ந்த நிலையை

(8ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

## இந்திராவின் பிரிவால் அழுகிறோம்

இந்தி ராவே இந்தி ரா
இந்தி யாவின் தலைவி யே
இந்தி ராவே இந்தி ரா
இந்தி யாவின் திலக மே
இந்தி ராவே இந்தி ரா
ஏழை களின் இதய மே
வெந் தழலே நெஞ்சினி லே
வாடு கிறோம் நின்பிரி வால்

○ ○ ○

நேரு பெற்ற புதல்வி யே
நேர் கொள்கைக் குன்றமே
காரு ணியச் சின்ன மே
காந்தி யத்தின் வடிவ மே
பேருயர் த்திப் பாரதத் தின்
பிறர் மதிக்க வாழ்ந்த னை
தீராத வேத னை தான்
தீண்ட நொந் தழுகி றோம்.

— மணிமன்றன்

# இமயம் சரிந்தது!
# தியாகத் தீபம் அணைந்தது!



இறைவனுடன் இணைந்துவிட்ட

மற்றுமொரு மகாத்மா — பாரதத்தின் தவப் புதல்வி!

### யாழ். பல்கலைக்கழக

# இஸ்லாமிய மாணவர் ஆயுதமுனையில் பயமுறுத்தல்

## மாணவர் அவை கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் இஸ்லாமிய மாணவர், ஒருவர் ஆயுதமுனையில் பயமுறுத்தப்பட்டது குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பு கவலை தெரிவித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

'விடுதலை ஸ்தாபனங்களின் கவனத்துக்கு' என்றதலைப்பில் வெளியிடப்பட்ட இவ் அறிக்கைப் பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''இன்று தமிழ்பேசும் மக்கள் அனுபவித்து வரும் பல இன்னல்கள் அடக்குமுறைகளுக்கு மத்தியில் பல்வேறு விடுதலை ஸ்தாபனங்களும், தமிழ்பேசும் முழுச்சமுதாயமும் இவற்றுக் கெதிராக ஒரு ..னைப்பான கட்டத்தில் நின்று போராடிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் தமிழ்பேசும் இருமுக்கிய சமூகங்களுக்கிடையில் மனக்கசப்பை ஏற்படுத்தக்கூடியவகையில் சில சம்பவங்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்திருப்பது வேதனைக்குரிய தொன்றே!''

யாழ் பல்கலை கழகத்தில் கல்வி பயிலும் இஸ்லாமிய சகோதர மாணவர் ஒருவர் மாணவர்களைப் பொறுத்தவரையில் எவ்வித ஆதாரமும் இன்னமும் வெளிப்படுத்தாத நிலையில், ஆயுதமுனையில் பயமுறுத்தப்பட்டுள்ளார். இதனால் அம் மாணவர் தனது கல்வியைத் தொடரமுடியாத நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளார். இதனை ஒரு தனிப்பட்ட மாணவனுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட சம்பவமாகக் கொள்ளாது, தமிழ்பேசும் சமுதாயங்களுக்கிடையிலான நீண்டகால நல்லுறவை பாதிக்கக்கூடியதொரு நிகழ்ச்சியாக கொள்ளவேண்டியதுடன் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறும் பட்சத்தில், இந் நிகழ்ச்சி அரச யந்திரத்தைப் பலப்படுத்தவும், விடுதலைப் போராட்டத்தை பின் தள்ளக்கூடியதான செயற்பாடாகவும் அமைவதுடன், பல சமூக மாணவர்களும் கல்வி பயிலும் பல்கலைக்கழக மாணவர்களின் ஐக்கியத்தை பாதிக்கவும்செய்யும். (மா)

# மோட்டர் திருடியவர் பிடிபட்டார்

[சாவகச்சேரி]

கிளாலியிலுள்ள க. சிவம் என்பவரின் 15,000 ரூபா பெறுமதியான 'யமாகா' அவுட் போட் மோட்டரைப் பட்டப் பகலில் திருடியவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

இத் திருட்டுத் தொடர்பாக எழுதுமட்டுவாள் கிராம சேவையாளர் வே. துரைசிங்கம் விசாரணை நடத்தியசமயம் குற்றம் சாட்டப்பட்ட ரெ. றஞ்சன் குற்றத்தினை ஏற்றுக்கொண்டு, குற்றப் பணத்தினை கட்ட ஒப்புக்கொண்டார்.

இச் சம்பவத்தில் அவுட் போட் மோட்டார் உரிமையாளரான க. சிவம் என்பவர், இத் திருட்டுத்தொடர்பாக தனக்கு எவ்வித நஷ்டஈடும் தேவையில்லை எனவும் இனிமேல் இவ்வாறான திருட்டு முயற்சிகளில் சம்பந்தப்பட்டவர் ஈடுபட்டு ஏனையகடற்றொழிலாளருக்கு இன்னல்களை ஏறபடுத்தக் கூடாது என்று வேண்டினார்.

இதனையடுத்து குற்றவாளி 1,000 ரூபாவை குற்றப்பணமாக கிளாலி கடற்றொழிலாளர் சங்கத்திற்கு கட்டவேண்டும் என சங்கத்தலைவர் எஸ். யேசுதாசன் உத்தரவிட்டார்.

## மாணவன் கைது

[கல்வியங்காடு]

நல்லூர் சாதனா பாடசாலை மாணவன் மகாதேவா சகாதேவன் [16 வயது] இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்டார்.

கச்சேரி-நல்லூர் வீதியில் வசிக்கும் சகாதேவனுடன் கல்வியங்காடு டயர் கடையில் வேலைசெய்யும் நடராசா ரவீந்திரதாசனும் [21 வயது] கைது செய்யப்பட்டார்.

நேற்றிரவு நான்கு வாகனங்களில் வந்த இராணுவத்தினர் இவர்கள் இருவரையும் வீட்டில்வைத்து கைதுசெய்தனர்.

## அளவெட்டியிலும் சோதனை

(கல்வியங்காடு)

அளவெட்டி, மாகியப்பிட்டி சுற்றுடல் முழுவதும் ராணுவத்தினரால் சோதனையிடப்பட்டது.

வீதியில் கார் வைத்துக் கொண்டுநின்ற இருவர் ராணுவத் தாக்குதலால் தலையில் காயமுற்றனர்.

# வயாவிளான் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன் தினம் இரவு, விடுதி மாணவ-மாணவிகள் இம்சிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வித்தியாலய மாணவ விடுதிகள் மூடப்பட்டுள்ளன.

தொடர்ந்து மூன்று நாட்களுக்கு வித்தியாலய மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரிக்கப்போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு சுமார் 8 மணியளவில் வித்தியாலய முன்னுள்ள வீதியில் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த இராணுவத்தினரின் 'ட்ரக்' வண்டியின் 'ரயர்' பலத்த சத்தத்துடன் வெடித்ததாகவும், பின்னர் துப்பாக்கி வேட்டுகள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டதுடன் விடுதி மாணவர்கள் அழைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுசம்பந்தமாக மகாவித்தியாலய அதிபர் கல்விஅதிகாரிகளுக்குப் புகார்செய்துள்ளார். (மா)

## மற்றுமொரு மரணதண்டனை

(புலோலி)

பருத்தித்துறையில் இளைஞர் ஒருவர் தீவிரவாத இயக்கமொன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

எஸ். சோமசுந்தரம் (20 வயது என்ற இந்த இளைஞர் சுடப்பட்டு இவரது சடலம் நேற்றுக்காலை பருத்தித்துறை கூ. மொ. விற்பனை நிலையத்திற்கு அருகிலுள்ள மின்கம்பத்துக்கு அருகில் காணப்பட்டது.

சடலத்துக்கு அருகில் காணப்பட்ட அட்டையொன்றில் இறந்தவர் இன்பருட்டியைச் சேர்ந்த சோமசுந்தரம் என்றும் ''துரோகிகளை ஒழிப்போம், தூய இயக்கத்தை வளர்ப்போம், இயக்கத்தைக் காட்டிக் கொடுப்போருக்கு மரணதண்டனை விதிக்கப்படும்'' என்று குறிப்பிட்டு அட்டையின் அடியில் ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது

பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை ஸ்தலத்துக்கு சென்று விசாரணை நடத்தினார். இறந்தவரின் சடலத்தை அவரது சகோதரர்கள் எஸ். குழந்தைவேலு, எஸ். அப்புத்துரை ஆகியோர் அடையாளம் காட்டினர். சடலம் தற்போதுபருத்தித்துறை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

## கொள்ளை

[முழங்காவில்]

பூநகரி ப. நோ. கூ. சங்க பல்லவராயன் கட்டு மக்கள் கடையில் இரவு காவலாளியை பயமுறுத்தி சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை இனம் தெரியாத இளைஞர் கோஷ்டி கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இக் கொள்ளை கோஷ்டியினர் உழவு இயந்திரத்திலும் மோட்டார் சயிக்கிளிலும் வந்தே இக் கொள்ளையை நடத்தியுள்ளனர். இது தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## யாருடையது?

தெல்லிப்பழை வட மேற்கைச் சேர்ந்த திரு. கதிர்காமு மகேந்திரன் என்பவரின் அடையாள அட்டையை திரு பொ. தேவன் என்பவரும், உசனைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் ஸ்ரீதரனின் அடையாள அட்டையை திரு. எஸ். அருளானந்தமும், மாதகல் வடக்கைச் சேர்ந்த திரு. கந்தையா நாகராசாவின் அடையாள அட்டையை திரு. ஏ. நிர்மலதாசனும், 88 சிறி 3481 மோட்டார் சைக்கிள் ராக்ஸ், இன்சூரன்ஸ் முதலியவற்றையும் திரு. எஸ். லச்சுமிகாந்தனின் புகைப்படம் முதலியவற்றையும் திரு. சிவராசா சிவராஜேஸ்வரனும் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## ஊரடங்கு: தளர்த்தும்படி கோரிக்கை

பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை கிழக்குப் பகுதியில் ஊரடங்கு நேரத்தை அதிகாலை 3 மணிக்கு தளர்த்தும்படி பச்சிலைப்பள்ளி பிரஜைகள்குழு தேசிய பந்தோபஸ்து அமைச்சரைக் கோரியுள்ளது.

இரவில் கடலில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருப்பதால், மீனவக்குடும்பங்களின் அன்றாட வாழ்க்கை மிகவும் மோசமடைந்துள்ளது. இதனால் நேரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்படி பிரஜைகள் குழு கோரியுள்ளது.

## கறுப்புக்கொடி

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில்பிரதமர்இந்திரா காந்தியின் மறைவையொட்டி மினிபஸ்கள் மற்றும் வாகனங்களில் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டது. [க]


# விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன்கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க பாவியுங்கள்

''பாயர்'' உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய ''சேர்கோப்பூர்''

450 மி. லீ. — 57 ரூபா. 3.25 லீற்றர் — 375 ரூபா மாத்திரமே.

நெல் விதைத்து 7—21 நாட்களுக்கிடையில்

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி ஆகிய எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) ''ஹெடோனல் எம். 60%''
450 மி. லீ. — 60/- ரூபா. 2 லீற்றர் — 245/- ரூபா.

(2) ''ஹெடோனல் எம். 40%''
450 மி. லீ. — 38/- ரூபா

(3) ''ஹெடோனல் D. 55%''
450 மி. லீ. — ரூபா 57-50

# ஹெகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

உங்கள் ஏக விநியோகஸ்தர்கள்:

யூனியன் ஏஜன்சிஸ், 50A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ். 4, அந்தோனிப்பிள்ளை கட்டடம், கிளிநொச்சி.
குலோப் ரேடர்ஸ், பசார் வீதி, வவனியா.
கே. அக்பார், மன்னார்.



# வெளிநாடு செல்வதற்கு

★ விமான டிக்கட்:
விசேட கட்டணத்தில் லண்டன், பரீஸ், சிங்கப்பூர், மலேசியா
SPECIAL FARE TO LONDON, PARIS, SINGAPORE AND MALAYSIA
Attractive fares to European Countries U. S. A., Canada and Australia.

★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை
(வங்கியின் கட்டணத்தில்) வாரநாட்களில் காலை 8.30 முதல் 4.30 வரை பெற்றுக்கொள்ளலாம்.
BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30

★ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

# மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92 போன்: 24154

# "பூநகரி கமத்திலிருந்து துப்பாக்கி முனையில் கணவர் கடத்திச்செல்லப்பட்டார்"

## மனைவி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''பூநகரியிலுள்ள கமத்திலிருந்து 4 தினங்களுக்கு முன் துப்பாக்கி முனையில் நான்கு இளைஞர்கள் எனது கணவரை வானில் கடத்திச் சென்றார்கள். நான் அதன்பின் எனது சொந்த ஊரான வளலாய்க்கு சென்றுவிட்டேன். கணவர் சுடப்பட்டு, யாழ். ஆஸ்பத்திரியில் இருப்பதாகபத்திரிகை மூலம் அறிந்தேன்''

வளலாயைச் சேர்ந்த 45வயதான எஸ். சிவராசாவின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த அவரது மனைவி அன்னபாக்கியம் மேற்கண்டவாறு கூறினர்,

யாழ். பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் நேற்று மரணவிசாரணை நடத்தினர்.

மனைவி சாட்சியமளிக்கையில் தான் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்தபோது கணவரை அனுராதபுரத்திற்கு கொண்டுபோக 'அம்புலன்ஸ்' ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், தானும் அனுராதபுரம் செல்ல சம்மதித்ததாகவும் கூறினர்.

தமது கணவர் ஒரு விவசாயி என்றும், தங்களுக்கு நான்கு பிள்ளைகள் உண்டென்றும் கூறினர்.

'அம்புலன்ஸ்'சில் ஏறியபோது இனந்தெரியாத சில இளைஞர்கள் வந்துதன்னை 'அம்புலஸ்'சிலிருந்து இறக்கிவிட்டு, கணவரை கடத்திச் சென்றதாகவும் கூறினர்.

தனது கணவரை செம்மணியில் சுட்டு, சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக பத்திரிகையில் படித்து ஆஸ்பத்திரிக்கு வந்ததாகவும் கூறினர்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை மனைவியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டு, தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். (க)

# பச்சிலைப்பள்ளி பகுதியில் பிரஜைகள் குழு

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி பகுதியில் பிரஜைகள் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

பிரஜைகள் குழுவின் தலைவராக பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. ஏ. பி. ஜோஜ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக திரு. ப. அரியரத்தினமும், உபதலைவராக திரு. வி. நடராசாவும்' உப செயலாளராக திரு. அ. அல்பிரட்ஆகியோர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# வாகனம் முற்றாக சேதம்: அரச அதிபருக்கு புகார்

(யாழ்ப்பாணம்)

நாகர் கோவில் குடாரப்பு கடற்கரையை நோக்கி கடற்படையினர் சுட்டதால் 75,000 ரூபா பெறுமதியான தனது வாகனம் முற்றாக சேதமடைந்துள்ளதாக, நாகர் கோவிலைச் சேர்ந்த எம். சிவஞானசுந்தரம் யாழ். அரசாங்க அதிபருக்கு புகார் செய்துள்ளார்.

கடந்தமாதம் 26ம் திகதி மாலை5 மணியளவில்,வாடியில் உப்பை இறக்கிக்கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்ததாகவும் அப்போது கடலிலிருந்து சுமார் ஒருமணிநேரம் சுடப்பட்டதாகவும் இதனல் வாகனம் முற்றாக சேதமடைந்ததாகவும், அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தனது குடும்பத்தில் 7 பேர் உள்ளனரென்றும், இத்தொழிலை நம்பியே தான் இருப்பதாகவும், இச்சம்பவம் தொடர்பாக சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் வந்து பார்வையிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அப் புகாரில் கோரப்பட்டுள்ளது. (க)

# இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி—17[02-11-1984]
வாரம்—வெள்ளி
திதி—நவமி பிற்பகல் 12-42ன் மேல் தசமி
நக்ஷத்திரம்— அவிட்டம் பிற்பகல் 5-31 வரை

மேடம்:- முன்னேற்றப் பாதையில் தடைகள தென்படுகின்றன. தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் உருவாகும் சகோதர வழியால் சஞ்சலச் செய்தியும் கிடைக்கும்.

இடபம்:- வாகனச் சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம் வரவிலும் திருப்திகாணப்படும் தாய் வழி மூலம் தன லாபமும் கிடைக்கும்.

மிதுனம்:- மகிழ்ச்சிகரமான தினம் புத்திர வழியாலும் புகழ் வந்து சேரும் நீண்டநாள நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள்.

கடகம்:- பணம் பலவழிகளிலும் செலவாகும் அந்நிய நண்பர் ஒருவரால் ஏமாற்றமடையக் கூடும் உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு பார்ப்பர்

சிங்கம்:- களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் இடம் பெறும்.

கன்னி:- தொல்லைகள் தலைதூக்கும் தொழில் புரியும் இடத்தில் ஏமாற்றத்திற்கு இடமுண்டு வழக்கு விவகாரங்களில் நிதானம் வேண்டும்

துலாம்:- நீண்டநாள் கனவு இன்று நனவாகும் பெரியவர்கள் உதவி தாராளமாக கிடைக்கும் புண்ணிய விருப்பும் மேலிடும்.

விருச்சிகம்:- மனதில் புதிய எண்ணங்கள் தலை தூக்கும் தொழில் துரித முன்னேற்றம் உண்டு பொது மக்களின் தொடர்பும் பெருகும்.

தனுசு:- வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும் நீண்ட நாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும் மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

மகரம்:- வாய்வுச்கோளாறு உடல் நலத்தைப்பாதிக்கலாம் உணவு விடயத்தில்சுகாதாரம் வேண்டும் தானிய நஷ்டத்திற்கும் இடமுண்டு

கும்பம்:- மனக்கோட்டை கட்டுவீர்கள் உடல் நலம் பாதிக்கப் படலாம் அபாயகரமான காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மீனம்:- குடும்பத்தில்பிணக்குகள் பல மடையும் சிலருக்கு எதிர்பாரரத வரவுக்குமிடமுண்டு கொடுத்த வாக்குறுதியைக் காப்பற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள்.

திருமலை
வே. ரவீந்திரன்

# இரங்கல் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை பிளவத்தை சனசமூக நிலையம் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவையொட்டி நிலையத்தலைவர் திரு சி. தாமோதரம்பிள்ளை தலைமையில் கூடி இரங்கல் தீர்மானமொன்றை நிறைவேற்றி அன்னரின் குடும்பத்தினருக்கு அனுப்பி வைத்துள்ளது

இச் சனசமூக நிலையத்தில் கறுப்புக்கொடியும்பறக்கவிடப்பட்டுள்ளது.

# 'யாழ். உதைபந்தாட்ட லீக்' தலைவர் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

''பாரதத் தலைவி திருமதி இந்திரா காந்தியின் அகால மரணத்தை கேட்டு நாம் மிகவும் அதிர்ச்சி அடைந்துள்ளோம். எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்''

இவ்வாறு 'யாழ், உதைபந்தாட்ட லீக்'கின் தலைவர் டாக்டர் ஜே பி, ஸி, பிலிப் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் சகல உதைபந்தாட்டப் போட்டிகளும்எதிர்வரும் 10-ம் 11-ம் திகதிகளுக்குப் பின் போடப்பட்டுள்ளது. (வி)

# எம். ஜி. ஆர். சுகமடைய அன்னதானம்

(நீர்வேலி)

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பூரண சுகமடைய வேண்டி, நீர்வேலி ஸ்ரீ பரமேஸ்வரி சனசமூக நிலையத்துக்கு அருகில் உள்ள ஞானவைரவர் கோவிலில் விசேட பூசையும், பிரார்த்தனையும், அன்னதானமும் நடைபெற்றது.

சனசமூக நிலைய அங்கத்தவர்களாலும், ஐக்கிய நாணய சங்க நிர்வாகிகளினலும் நடத்தப்பட்ட மேற்படி வைபவத்தில் ஐநூறுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

# உண்ணுவிரதம்

(யாழ்ப்பாணம்)

திரு. எம். ஜி. ராமச்சந்திரன் உடல் நிலை சீரடைந்து பல்லாண்டு காலம் வாழ வேண்டி நேற்று வியாழக்கிழமை கட்டுடை அரசடி விநாயகர் ஆலயத்தில் விஷேட பூசையும் பிரார்த்தனையும் நடைபெற்றது. அத்துடன்கட்டுடை மானிபபாய் இளைஞர் யுவதிகள் ஆலய முன்பாக ஒரு நாள்உண்ணுவிரதமும் அனுஷ்டித்தனர்.

# முழுநாள் உண்ணுவிரதம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் சாந்தை அம்மன் கோவில் முன்றலில் இப்பகுதி எம். ஜி .ஆர் மன்றத்தினர் முழுநாள் உண்ணுவிரதம் இருந்தனர்.

தமிழக முதலமைச்சர்திரு. இராமச்சந்திரன் பூரண சுகமடைய வேண்டி உண்ணுவிரதம் இருந்ததுடன் விஷேட பிரார்த்தனையும் நடத்தினர்.

தொண்டமானறு செல்வசந்நிதி ஆலயத்திலும் விஷேட பூசை நடாத்தினர்

உண்ணுவிரதத்தில் ஆண்-பெண்-சிறுவர்-சிறுமிகள் உட்பட 100க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (மா)

# ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த பரிசளிப்புவிழாவும, 1984 ம் ஆண்டுக்கான பாடசாலைத் தோட்ட விவசாய அறிவுப் போட்டிகளும் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம்தெரிவித்துள்ளது.

# யாழ்ப்பாண மக்கள் சோகத்தில் ஆழ்ந்தனர்

(யாழ்ப்பாணம்)

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவையொட்டி யாழ். நகரம் நேற்று சோகமயமாகக் காட்சியளித்தது!

வர்த்தக நிலையங்கள் கடைகள் யாவும் பூட்டப்பட்டு பெரிய அளவில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. வீடுகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன

டாக்ஸிகள், ஓட்டோ றிக்ஷோக்கள், சைக்கிள்களில், கறுப்புக் கொடி பறக்க விடப்பட்டிருந்தது.

நகரில் சன நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவுச் செய்திகளை அறிவதில் மக்கள் முழு நாளும் கவனம் செலுத்தினர்.

# இரங்கல் செய்தி

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளி சன சமூக நிலையம், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவுகுறித்து இரங்கல் செய்தியொன்றை புதிய பிரதமர் திரு. ரஜிவ் காந்திக்கு அனுப்பிவைத்துள்ளது.

இச் சனசமூக நிலைய முன்றலில் கறுப்புக் கொடியும் பறக்கவிடப்பட்டுள்ளது.

# விசேட பூசைகள்

[யாழ்ப்பாணம்]

சுகவீனமுற்றுள்ள தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி. ராமச்சந்திரன் பூரண சுகமடைய வேண்டுமென்று வல்வெட்டித்துறையில் உள்ள இந்து ஆலயங்களில் விஷேட பூஜைகள், பிரார்த்தனைகள் நடாத்தப்பட்டன.

வல்வை பிரஜைகள்குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருத்தது. வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அதன் பிரதமகுரு ஸ்ரீ தண்டாயுதபாணி தேசிக ஐயர், முதலமைச்சர் குணமடைய வேண்டி முழுநாளும் விசேடபூஜை நடாத்தினர்.

வல்வெட்டித்துறை நெடியகாடு பிள்ளையார், வைத்தீஸ்வரன் கப்பலோட்டிய பிள்ளையார் கோவில்களிலும் விஷேட பூஜை,பிரார்த்தனைகள் நடைபெற்றன. (மா)

# நடன,சங்கீத பயிலுநர் நேர்முகப் பரீட்சை

[கொழும்பு]

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தமிழ் கலாச்சார குழுவிற்கான நடன, சங்கீத பயிலுநர்களுக்காக விண்ணப்பித்துள்ளவர்களுக்கு நேர்முகப் பரீட்சை இம்மாதம் 3ம்,4ம் திகதிகளில் கொழும்பிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தலைமைக் காரியாலயத்திற்கு அருகிலுள்ள 'அழகியற் கலை, பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது

நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்க வேண்டிய விண்ணப்பதாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தினல் பிற்போடப்பட்டுள்ளது

# மரணவிசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பணம்)

கரவெட்டி கலாவதி மரணவிசாரணை சாட்சி வராததினல் நேற்றுமுன்தினம் ஒத்திப்போடப்பட்டது,

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இம்மரண விசாரணை எடுக்கப்பட்ட போது சாட்சி வராததினல் ஒத்திப் போடப்பட்டது.

கடந்த தவணையின் போது இறந்தவரின் மைத்துனரான கொற்றாவத்தையைச் சேர்ந்த ராமு சண்முகநாதன், சாட்சியமளிக்கவிருப்பதாக தெரிவித்தார் இவர் நேற்று வராததினல் விசாரணை நவம்பர் 2-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க)

# இரவிரவாக ஒலித்த குண்டுகள்

(யாழ்ப்பாணம்)

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் மீண்டும் தொடர்ச்சியான குண்டுகள் நேற்றுத் தீர்க்கப்பட்டன.

நேற்று மாலை ஆறு மணிக்கு முதலில் வெடித்த குண்டு, நள்ளிரவுவரை தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருந்தது.

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவுக்காகவே இக்குண்டுகள் தொடர்ச்சியாகத் தர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

# வயோதிபரைக் காணவில்லையாம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய் வீதியைச் சேர்ந்த 11 பிள்ளைகளின் தந்தை ஒருவரைக் கடந்த இரு வாரகாலமாக காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுருட்டு சுற்றுபவரான சின்னத்தம்பி கந்தையா என்னும் 58 வயதுடைய இவர் இம்மாதம் 5-ம் திகதி தொழிலுக்காக தொண்டமானறு மண்டான் என்னுமிடத்திற்கு சென்றவர் என்றும், இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் . தெரிவிக்கப்படுகின்றது.

# 'சிரமதானம்மூலம் அபிவிருத்தி'

(பண்டத்தரிப்பு)

''அரசாங்கம் தமிழ்பகுதிகளின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக்கூட வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடிவுசெய்துவிட்டது, இந்நிலையில் நாங்கள் ஒன்றுபட்டுப் பின்தங்கிய நிலையிலுள்ள எமது பகுதிகளைச் சிரமதானம் மூலம் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

இவ்வாறு பண்டத்தரிப்பு தவிட்டைக்குளம் சிரமதான வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பண்டத்தரிப்பு ப நோ கூ. சங்கத் தலைவர் திரு. ஆ. யேசுதாசன் குறிப்பிட்டார். பண்டத்தரிப்பு கிராமசேவை அலுவலர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இச்சிரமதான வைபவத்தில் பலர் கலந்து கொண்டனர்.

# ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகைகள்

[யாழ்ப்பாணம்]

சத்துணவு வாரத்தை ஒட்டி ஆரோக்கிய வாழ்விற்காக 12 வழிவகைகள் பற்றிக் குறிப்பிட்டு. மில்க்வைற் சுகாதாரப் பிரிவு பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

# சீக்கிய காவலர்களை நியமிக்கும்படி இந்திராவே வற்புறுத்தினர்!

(புதுடில்லி)

கடந்த ஜூன் மாதம் 'பொற்கோயில்' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இந்திராவின் மெய்க்காப்பாளர்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

தீவிர சீக்கிய சமூகத்தவர்கள் கொலை மிரட்டல்களை இந்திராவுக்கு விடுத்தாலும், சீக்கிய இராணுவத்தினர் சேவையிலிருந்து குழப்பம் செய்ததாலும் மேற்கண்டவாறு ஆலோசிக்கப்பட்டது.

ஆனால் திருமதி இந்திரா காந்தி தமக்கு சீக்கிய மெய்க்காப்பாளர்களே இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினராம். அத்துடன் சீக்கிய வீரர்கள் மீது அவர் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்ததாக பாதுகாப்புச் சேவை வட்டாரங்கள் தெரிவித்தன. (கி)

## அரைக்கம்பத்தில்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொய்லர் ஐ நா. கொடியை வியாழக்கிழமையும், திருமதி காந்தியின் ஈமைக்கிரியைகள் நடைபெறும் தினமான சனிக்கிழமையும் நியூயோர்க் ஐ.நா, தலைமையகத்தில் அரைக்கம்பத்தில் பறக்கவிடும்படி பணித்துள்ளார். (கி)

## நீதியை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்துள்ளீர்கள். உங்களின் எளிமை, உணிவு ஆகியவை மதிப்பையும், ஈராட்டையும் பெற்றுத்தந்துள்ளன. நாட்டின் மிக உயர்ந்த மனிதர்களோடு எல்லாம் பழகநேர்ந்தாலும் பொதுத்தலைமைகளை நீங்கள் இழந்துவிடவில்லை. சாதாரண நிலையிலிருந்து நீதித்துறையின் மிக உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறீர்கள். உங்கள் கடந்தகால மதிப்புக்குரிய சிரேஷ்டர்களான என். நடராஜா கே. சி. டாக்டர் தம்பையா கியூ. ஸி. மற்றும் எஸ் ஜே. வி செல்வநாயகம் கியூ. ஸி ஆகியவர்களுக்கு நீங்கள் மிகவும் கடப்பாடுடையவர்களாய் இருப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை என்றுர்.

## புதி நிர்வாகிகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு உ. ந. தேவகடாட்சம், உப தலைவர்கள்:- திரு.எஸ். சிவபாதம், திரு ஏ. சி. ஜெயரத்தினம், செயலாளர்:- திரு எஸ். நல்லதம்பி உப செயலாளர்:- திரு.சிறில் சுகந்தரன், பொருளாளர்:- திரு எம். பாலநாதன் செயற்குழு உறுப்பினர்களாக ஏழுபேர் தெரிவு செய்யப்பட்டனர்.

# மரண அறிவித்தல்

## திருமதி ஆச்சிமுத்து ஐயாத்துரை

திருமதி ஆச்சிமுத்து ஐயாத்துரை காலமானுர். அன்னுர் திரு. ஐ. நாகரத்தினம் (ஆசிரியர் யாழ் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புத்தாயாரும், சுபத்திரா தேவியின் மாமியாரும், நாகேஸ்வரி, சுசிலன், சுருமதி, நந்தினி, சுதர்சனு, சுஜீவன், ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 2-11-84 வெள்ளி பிற்பகல் 3 மணியளவில் புலவனுர் ஒழுங்கை, கல்வியங்காடு இல்லத்தில் நடைபெற்று செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அறிவிப்பவர்

550 அ. நாகரத்தினம்

# மரண அறிவித்தல்

## கனகசபை மகேந்திரன்

(கரம்பொன்)

கரம்பொனைச் சேர்ந்த க. மகேந்திரன் காலமானுர். அன்னுர் கொழும்பு வர்த்தகர் V. G Sons உரிமையாளர் திரு நா. வே கனகசபை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், விஜயலக்ஷ்மியின் அன்புக் கணவரும், நவோதன், நிசாந்தி, நிரஞ்சி, நாகதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரேசன் [D O கிளிநொச்சி), விஜயநாதன் [கலா றேடர்ஸ், கிளிநொச்சி], கிருபைநாதன் (மேற்கு ஜெர்மனி), கலாமோகன் (U. K) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கரம்பொன் வல்லிபுரம் தம்பதிகள், சீ. நவரெத்தினம் ஆகியோரின் மருமகனும் சுசீலா சுந்தரேசன், ஜெயபாலசிங்கம் (U. K), தனபாலசிங்கம் (மேற்கு ஜெர்மனி), திருமதிகள் ஜெயலக்ஷ்மி சிவசுப்பிரமணியம், பாக்கியலக்ஷ்மி அருணுசலம், ஜெகதாம்பிகை வைத்திலிங்கம், வரதலக்ஷ்மி குலசிங்கம், தனலக்ஷ்மி சிவானந்தசோதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னுரது ஈமக்கிரிகைகள் 2-11-84ம் திகதி இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு கரம்பொன் தெற்கு குடும்ப மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

546

# "திருமதி இந்திராகாந்தி சில தினங்களுக்கு முன்னர்தான் எனக்கு ஆறுதல் கூறினர்!"

## பாராளுமன்றில் மாக்கிரெட் தட்சர்

லண்டன், நவ. 1

"இரு வாரங்களுக்கு முன்னர் என்மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி குறித்து சில தினங்களுக்கு முன்னரே திருமதி காந்தி எனக்கு ஆறுதல் கூறியிருந்தார்'' என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரட் தட்சர் கூறினர்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் மக்கள் சபையில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:-

"பயங்கரவாதம் கண்டிக்கப்படவேண்டும் எந்தவடிவிலும் அதனைத் தலையெடுக்க அனுமதிக்கக்கூடாது என்று தெரிவித்ததுடன் நான் குண்டு வெடிப்பில் இருந்து தப்பியது குறித்து தாம் ஆறுதலடைவதாகவும் திருமதி இந்திரா காந்தி எனக்குச் செய்தி அனுப்பியிருந்தார்.

திருமதி இந்திரா காந்தி ஒரு தலைசிறந்த ஜனநாயகவாதி. அவர் கொலைசெய்யப்பட்டது, ஜனநாயகம்மீதான ஒரு பெருந்தாக்குதலாகும்'' என்றுர்.

திருமதி மார்க்கிரெட் தட்சர் இப்படிக் கூறியபோது, மக்கள் சபை உறுப்பினர்கள் ஆம், ஆம்'' என்று அவர் பேச்சை வரவேற்றனர்.

எதிர்வரும் சனிக்கிழமை திருமதி தட்சர் புதுடில்லியில் இந்திராவின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்வார். (கி)

# யாழ். ரயில் நிலையத்தில்...

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு அருகில் நேற்று பிற்பகல் இருகுண்டுகள் வெடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, யாழ்.தேவி சுமார் 3 மணிநேரம் தாமதித்துப் புறப்பட்டது.

துப்பாக்கியுடன் ரயில் நிலையம் வந்த இளைஞர் கோஷ்டி ஒன்று இக்குண்டுகளை வெடித்ததாகக் கூறப்படுகிறது.

இக்குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

3மணி நேரமும் சகலபிரயாணிகளும், வழிஅனுப்பவந்தவர்களும் ரயிலில் தங்கியிருந்ததாகவும் கூறப்படுகிறது.

சுமார் ஒரு மணிநேரம் தொடர்ந்து வெடிச்சத்தம் கேட்டபடியிருந்தது. இச்சம்பவத்தின் போது வழியனுப்ப வந்தவர் ஒருவர் காயமடைந்ததாகவும், அவரை ஒரு ஆணும், பெண்ணும் குறுசகு வழியொன்றினால் தூக்கிச் சென்றதாகவும் கூறப்படுகிறது. (க)

# யாழ். பஸ் நிலையத்தில் துப்பாக்கிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பஸ் நிலையத்தில் நடந்த துப்பாக்கிப்பிரயோக, குண்டுவெடிப்புச் சம்பவங்களின் போது ஆயுதப்படை வீரர் ஒருவருக்குச் சிறுகாயம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிற.

பஸ்நிலையத்தில் நின்ற மற்றொரு இளைஞருக்கும் இச்சம்பவத்தின் போது காயமேற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பஸ் நிலையத்தில் அடுத்தடுத்து குண்டு வெடிப்புச்சம்பவம் இடம்பெற்றமையைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றபோது மக்கள் சிதறி ஓடினுர்கள்.

## வயதில்..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

விமானத்தை ஒட்டு'' என்றே இவர் எச்சரித்தாராம்.

இந்தியன் ஏயர்லைன்ஸின் முக்கிய விமானிகளில் ஒருவரான இவர் 1980-ம் ஆண்டு சஞ்சேகாந்தி விமானவிபத்தில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே அரசியலில் பிரவேசித்தார்.

இதனையடுத்து தனது விமானிப் பதவியையும் கைவிட்டு இந்தியன் 'ஏயர் லைன்ஸில்' இருந்து ராஜினுமா செய்தார். பின்னர் தமது சகோதரனின் தொகுதியான அமேதியில் போட்டியிட்டு இந்திய பாரளுமன்ற உறுப்பினராக பெரும்பாண்மை பலத்துடன் தெரிவு செய்யப்பட்டார்.

அரசியலில் தாயார் திருமதி இந்திரா காந்திக்கு உற்றதுணையாக இவர் இருந்து வந்தார். இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இவர் பதவி வகித்துவருகிறுர்.

இந்திராவின் மரணச்சடங்குகளின் பின்னர் இந்திரா காங்கிரஸ் தலைவராக இவர் தெரிவு செய்யப்படுவர் என்று கூறப்பட்டது (கி)

## தேசியக்கொடி அறுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் அரைக்கம்பத்தில் தொங்கவிடப்பட்டிருந்த தேசியக் கொடி நேற்றுக்காலை இரு இளைஞர்களால் அறுத்துச்செல்லப்பட்டது.

நேற்றுக்காலை சுமார் 10மணியளவில் ஆஸ்பத்திரிக்குள்வந்த இரு இளைஞர்களில் ஒருவர் கொடிக்கம்பத்தில் ஏறி கொடியை அறுத்துச்சென்றதாகக் கூறப்படுகிறது.

## மக்கள்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சீக்கியர்களென்றும், இந்த இருவரும் உயிருடன் தீமூட்டிக் கொளுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது. மேலும் இருவர் பொலிஸ்காரர்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இது தவிர இந்தியாவின் பல பகுதிகளிலும் சீக்கியர்களுக்குச் சொந்தமான உடைமைகள் சேதமாக்கப்பட்டுவருகின்றன.

சீக்கியரான ஜனுதிபதி ஸெயில்சிங்கின் மோட்டார்க்காரும் கல்லெறிக்குள்ளானது என்று கூறப்பட்டது. (கி)

## இமயம்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் நேற்று பாடசாலைகள் நடைபெறவில்லை. பாடசாலைகளுக்கு கறுப்பு பட்டி அணிந்துவந்த சில மாணவர்களும் உடனடியாக திரும்பிச் சென்றனர்.

யாழ் நகரம் முழுவதும் சோகத்தில் மூழ்கியுள்ளது வீதிகளில் வாகனங்கள் நடமாட்டம் காணப்படவில்லை. வ போ. ச. பஸ்கள் சில சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும், பிரயாணிகள், மிகக் குறைவாகக் காணப்பட்டனர்.

தியேட்டர்களில் சினிமாக் காட்சிகள் நடைபெறவில்லை. தனியார் கல்லூரிகள் மூடப்பட்டிருந்தன.

யாழ் அரசாங்க செயலகத்திற்கு ஊழியர்கள் குறைவாக வந்திருந்தனர். யாழ். கல்விக்கந்தோர், மற்றும் அரசாங்கக் காரியாலயங்களுக்கும், ஊழியர்கள் குறைவாகவே வந்திருந்தினர்.

யாழ். மாநகரசபை ஊழியர்கள் மிகக்குறைவாக வந்திருந்தனர். அவர்களில் பலர் நண்பகலுடன் சென்றுவிட்டனர்.

இந்திரா காந்தி மறைவையொட்டி பலசுவரொட்டிகள் நகரெங்கும் ஒட்டப்பட்டிருந்தன. துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

## குண்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மெய்ப்பாதுகாவலர்களால் அறியமுடிந்ததாலேயே இக்கொலை நிகழ்ந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

காவலாலர்கள் இருவரினதும் துப்பாக்கியில் இருந்த ரவைகள் முழுவதுமே அவர் மீது தீர்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

## இந்திராவுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் திரு. சீ. வீ. கே, சிவஞானம் இந்தியத் தூதுவராலய உயர் ஸ்தானிகருடன் தொடர்பு கொண்டு அவரது அங்கீகாரத்துடன் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

யாழ். மாநகர சபையிலுள்ள இப்பதிவேட்டில் நேற்று, யாழ். ஆயர் அதிவண. வ. தியோகுப்பிள்ளை, தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், மாநகர சபை ஆணையாளர் திரு. சீ வீ. கே சிவஞானம், யாழ். பிரஜைகள் குழு செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் முதலில் அனுதாபச்செய்திகளைப் பதிந்து ஆரம்பித்துவைத்தனர்.

இப்பதிவேடு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்வரை வைக்கப்பட்டு திங்கட்கிழமை. இந்திய தூதரக உயர் ஸ்தானிகருக்கு அனுப்பிவைக்கப்படும்.

## டில்லியில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க வெளியுறவு அமைச்சர், செக்கோஸ்லாவிய பிரதமர் உட்பட பலர் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வார்கள்.

## ஊரெழு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இப்பகுதியிலுள்ள பல வீடுகள் நேற்றுச் சேதப்படுத்தப்பட்டதாகவும் ஊரெழுப் பகுதி புகை மண்டலமாகக் காட்சியளித்ததாகவும் கூறப்படுகிறது.

## இந்திராகொலை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சம்பவம் படமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நடந்தபோது பிரிட்டிஷ் படப்பிடிப்பாளர் ஒருவர் திருமதி காந்தியுடன் வந்துகொண்டிருந்தார். என்று இப்பொழுது தெரியவந்துள்ளது.

கொலைச்சம்பவம் மற்றும் திருமதி இந்திரா காந்தி வைத்திய சாலைக்குச் கொண்டு செல்லப்பட்ட நிகழ்ச்சி போன்றவற்றை அப்படப்பிடிப்பாளர் தமது காமெராவில் திரைப்படமாக எடுத்துள்ளார் என்று கூறப்பட்டது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.